MAY 2025 |VOL.2, ISSUE NO. 5

RMRL NEWSLETTER

A monthly bulletin of RMRL to educate, interpret, and inform

சிகாகோ பல்கலைக்கழக நூலகம்

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக வரலாற்றில்

சிகாகோ பல்கலைக்கழகம்

முனைவர் சுந்தர் கணேசன், இயக்குநர், RMRL

முதன்மைச் சொற்கள்: சிகாகோ, A.K. இராமானுஜன், மொழி, DSAL, Name Authority

சிகாகோ பல்கலைக்கழகத்திற்கும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்குமான தொடர்பு வரலாற்று முக்கியத்துவம் உடையது எனலாம். சிகாகோ பல்கலைக்கழகம் மட்டும் இல்லையென்றால் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் தமிழ்ப் பண்பாட்டின் முக்கியமான ஆய்வு மையமாக உருவாகியிருக்க முடியாது.

1992ஆம் ஆண்டு ரோஜா முத்தையா மறைந்தபோது, அவரது தனிப்பட்ட நூலகச் சேகரிப்பில் ஏறத்தாழ 1,00,000 அரிய நூல்கள், பத்திரிகைகள் மற்றும் ஆவணங்கள் இருந்தன. தமிழ் எழுத்தாளரும் ஆய்வாளருமான அம்பை (சி. எஸ். லட்சுமி) ஒரு செய்தித்தாளில் A famous Library for Sale என்று வெளியான விளம்பரத்தை சிகாகோ பல்கலைக்கழக நூலகரான ஜேம்ஸ் நை அவர்களிடம் பகிர்ந்தார். ரோஜா முத்தையாவின் சேகரிப்புகளைக் கோட்டையூருக்கே சென்று பயன்படுத்தியிருந்ததால் அவற்றின் முக்கியத்துவத்தை நன்கு அறிந்திருந்தார் அம்பை.

சேகரிப்புகளைப் பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு சிகாகோ பல்கலைக்கழகத்தில் இயங்கிய South Asia Language and Area Center என்ற துறை தெற்காசிய நாடுகளின் அரிய அச்சுப்பிரதிகளின் பாதுகாப்பு மற்றும் நூற்பட்டியல் தயாரிப்பு போன்ற பணிகளில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருந்தது. அச்சமயம் A.K. இராமானுஜன், சிகாகோ பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பயிற்றுவித்துக் கொண்டிருந்தார். இராமானுஜன், நூற்பட்டியலாளர் ஜேம்ஸ் நை, நார்மன் கட்லர் மற்றும் வேலன்டைன்



ஜேம்ஸ் நை

ப. சங்கரலிங்கம்

க்ரியா இராமகிருஷ்ணன்

டேனியல் ஆகியோர் இந்தத் தமிழ்ச் சேகரிப்பு வரலாற்று முக்கியத்துவமுடையதெனக் கருதி அதைப் பாதுகாக்க வேண்டும் என முடிவெடுத்தனர். Ford Foundation, Wellcome Institute for the History of Medicine, மற்றும் National Endowment for the Humanities ஆகிய மூன்று நிறுவனங்களிடமிருந்து நிதி திரட்டப்பட்டு, இச்சேகரிப்பு சிகாகோ பல்கலைக்கழகத்தால் வாங்கப்பட்டது.

பின்னர் சேகரிப்பைச் சென்னையிலேயே தமிழ் ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் பயன்படும்படி வைத்து பாதுகாக்கலாம் என முடிவு செய்யப்பட்டது. இந்தப் பொறுப்பை யாரிடம் வழங்கலாம் என்று பார்க்கும்போது இராமானுஜன் வழியாக சென்னையில் இயங்கிவந்த மொழி அறக்கட்டளை பற்றி சிகாகோ பல்கலைகழகத்திற்குத் தெரியவந்தது. அறக்கட்டளையின் தலைவராக எஸ். இராமகிருஷ்ணன் பொறுப்பு வகித்துக் கொண்டிருந்தார். நூலகத்தின் உருவாக்கத்தில் இராமகிருஷ்ணன் அவர்களின் பங்கு முக்கியமானது.

பொதுவாக தனது க்ரியா பதிப்பகம் மூலம் க்ரியா இராமகிருஷ்ணன் என அழைக்கப்படும் இவர், தமிழ்ப் பதிப்புலக வரலாற்றில் ஒரு முன்னோடி எனலாம். இவருடன் தியடோர் பாஸ்கரன், நாராயணன், சங்கரலிங்கம், பல்லடம் மாணிக்கம் ஆகியோர் மொழி அறக்கட்டளையின் அறங்காவலர்களாக இருந்தனர். இவர்கள் அனைவரின் இசைவுடன் சிகாகோ பல்கலைக்கழகத்துடன் ஒருங்கிணைந்து செயல்பட முடிவு எடுக்கப்பட்டது. அதன்படி ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் என்ற பெயரும் தேர்வு செய்யப்பட்டது. நூலகம் செயல்படுவதற்கான இடத்தைத் தேடும்போது சென்னை முகப்பேரில் ஓரிடம் தேர்வு செய்யப்பட்டு நூலகக் கட்டிடமும் கட்டப்பட்டது.

அச்சமயம் சங்கரலிங்கம் அவர்கள், சென்னைப் பல்கலைக்கழகத்தில் நூலகவியல் துறையில் பேராசிரியராகப் பணியாற்றி வந்த அனுபவத்தின் காரணமாக ரோஜா முத்தையா நூலகத் திட்டத்தின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதன்படி சங்கரலிங்கம் பல்கலைக்கழகத்திலிருந்து 3 ஆண்டுகள் விடுப்பு எடுத்துக்கொண்டு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் இயக்குநராகப் பணிபுரிந்தார்.

மொழி அறக்கட்டளை மற்றும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக செயல்பாடுகளைக் குறிப்பிட்டு மொழி அறக்கட்டளை Ford foundation நிறுவனத்திற்கு 1997 இல் ஒரு முன்மொழிவை (proposal) அனுப்பியது. அதற்கு இசைவு தெரிவித்து $2,00,000ஐ வழங்கியது Ford Foundation. இச்செய்தியை இராமகிருஷ்ணன் சங்கரலிங்கத்திடம் அலைபேசியில் தெரிவிக்க அவர் அதை நூலகத்தாரிடம் மகிழ்ச்சியுடன் “RMRL is Safe” என்ற நம்பிக்கையுடன் பகிர்ந்து கொண்டார்.

சிகாகோ பல்கலைக்கழகமும் மொழி அறக்கட்டளையும் ஒரு முக்கியமான முடிவுக்கு வந்தன. பத்தாண்டுகளில் இந்த நூலகம் செய்யவேண்டிய செயல்களைப் பட்டியலிட்டனர். அதில் முதன்மையான செயல்பாடாக ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் இருக்கும் அரிய ஆவணங்களை நுண்படம் எடுக்கவேண்டும் என்று தீர்மானித்தனர். பத்தாண்டுகளுக்குப் பிறகு பட்டியலிடப்பட்ட இச்செயல்களை நிறைவு செய்த பின்னர் ரோஜா முத்தையாவின் சேகரிப்புத் தொகுப்பினை ஏதாவது ஒரு பல்கலைக்கழகத்திற்கோ அல்லது ஆவணக்காப்பகத்திற்கோ கொடுத்துவிட்டு நூலகத்தைக் கலைத்துவிடலாம் என்பதே சிகாகோ பல்கலைக்கழகம் மற்றும் மொழி அறக்கட்டளையின் முடிவாக இருந்தது. ஆனால் பத்தாண்டுகள் கழித்து இந்த நூலகம் வேறொரு வடிவத்தினைப் பெற்றது.

நுண்படமெடுக்கும் தொழில்நுட்பம் இந்தியாவில் ஏற்கனவே இருந்தாலும் அதனை உலகத் தரத்தில் மேற்கொள்ளும் முயற்சியை ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் தொடங்கியது. அதற்காக வாஷிங்டனில் உள்ள

Library of Congressஇல் இருந்து வல்லுநர்களை அழைத்து வந்து பயிற்சிகளைப் பெற்றது. அதுமட்டுமின்றி புது தில்லியில் இருக்கும் வாஷிங்டன் கள அலுவலகம் மூலமாகவும் சில உதவிகள் கிடைத்தன. இந்தத் தொடர்புகள் அனைத்தும் சிகாகோ பல்கலைக்கழகத்தின் மூலமாகவே கிடைத்தன.அந்தக் காலகட்டத்தில் கணினி தொழில்நுட்பங்கள் தொடக்கநிலையில் இருந்ததால் தமிழில் நூற்பட்டியல் தயாரிப்பது மிகவும் கடினமாக இருந்தது. அப்போது சிகாகோ பல்கலைகழகத்தின் உதவியுடன் தமிழ், ஆங்கிலத்தில் Romanize செய்யப்பட்டு கணினியில் ஒரு பட்டியல் உருவாக்கப்பட்டது. பின்னர் சிகாகோ பல்கலைக்கழகத்தின் நேரடி ஒத்துழைப்புடன் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் Digital South Asia Library என்கிற ஆய்வுத்திட்டத்தில் ஈடுபட்டது.

நூலகம் தொடங்கப்பட்டு மூன்றாண்டுகளில் சங்கரலிங்கம் மறைந்துவிட்டார். ஆயினும் அந்த மூன்றாண்டுகளில் நூற்பட்டியல் தயாரிப்பின் தரம் எப்படி இருக்கவேண்டும் என்பது குறித்து நூலக ஊழியர்களுக்கு அவர் பயிற்சி அளித்திருந்தார். K.S. இராகவன் மற்றும் சங்கரலிங்கம் ஆகியோர் பிரெஞ்சு நிறுவனத்தில் எடுத்த முன்னெடுப்பின் அனுபவம் இதற்கு உறுதுணையாக இருந்தது எனலாம்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தில் மென்பொருள்களுக்காக எப்போதும் பணம் செலவு செய்ததே இல்லை; CDS/ISIS போன்ற இலவச மென்பொருட்களே பயன்படுத்தப்பட்டன. நூற்பட்டியலைத் தரப்படுத்துதல் மற்றும் உலகத்தரத்தில் நுண்படமெடுத்தல் போன்ற முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்தன.

தொழில்நுட்பங்கள் மேம்பாடு அடையும் வேளையில் சிகாகோ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் லண்டனில் இருந்த விக்ஸ் & வில்ஸன் என்ற நிறுவனத்திலிருந்து ஒரு நவீன கருவியை வாங்கி அவர்களிடம் பயிற்சியும் பெறப்பட்டது. நூலகத்திலிருந்து அந்தப் பயிற்சிக்கு நான் சென்றிருந்தேன். அச்சமயம் ஆக்ஸ்ஃபோர்ட்டிலுள்ள போடலின் நூலகம் வெல்கம் நிறுவனத்திற்கு செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

அப்போது பல தமிழ் நூல்களுக்கு நூற்பட்டியல் தயாரிக்கப்படாமல் இருந்ததை நான் பார்த்தேன். இச்செய்தியை நான் சிகாகோ பல்கலைக்கழகத்திற்குத் தெரிவிக்க, அவர்கள் ஆக்ஸ்ஃபோர்டுடன் பேசி நூற்பட்டியல் தயாரிப்பதற்கான முடிவை எடுத்தனர். அதன்படி ரோஜா முத்தையா நூலகத்திலிருந்து பிரகாஷ் லண்டன் சென்று ஆக்ஸ்ஃபோர்ட் மட்டுமில்லாமல் கேம்பிரிட்ஜில் இருந்த தமிழ் நூல்களுக்கும் நூற்பட்டியல் தயாரித்தார். அதன் பின்னர் சிகாகோ பலகலைக்கழகத்தின் மூலமாக வாஷிங்டன் டி. சி. யில் உள்ள லைப்ரரி ஆஃப் காங்கிரஸில் Name Authority என்ற தலைப்பில் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திலிருந்து பிரகாஷ் பயிற்சிக்கு அனுப்பப்பட்டார். இப்போது Name Authority என்ற புலத்தில் இவர் ஒரு நிபுணர்.


A FAMOUS LIBRARY FOR SALE

ABOUT ONE LAC old and RARE TAMIL BOOKS 1828-1960 including Tamil Magazines. Fifty Thousand article cuttings from various English and Tamil Magazines in all subjects. ONE LAC cuttings from news-papers. ONE LAC Pictures, and Prints, and 50000 Drama Notices, Cinema-Herald and Notices, Invitation Cards, Greeting Cards, Ravi Varma Prints etc (fully diff!). Books in English, Sanskrit, and Grantha, about 3000.

Asst Keeper of British Library, London, Dr. A. Gaur's opinion is as follows "......... AT A RECENT CONFERENCE IN PARIS WE ALL AGREED THAT YOUR COLLECTION WILL BE OF MORE VALUE TO TAMIL SCHOLARS........."

NO CATALOGUE. Interested persons' visiting invited.

ROJA MUTHIAH,
47 HOSPITAL STREET, KOTTAIYUR-623 106.
P.M. Dist. Tamil Nadu. India.

சிகாகோ பல்கலைக்கழகத்தின் உதவியுடன் Centre For Research Libraries உள்ள South Asia Microfilm Project (SAMP) போன்ற ஆய்வுத்திட்டங்களில் பணிபுரிவதற்கு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு வாய்ப்பு கிடைத்தது. அதன் பின்னர் பல நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் நேரடித்தொடர்பு நூலகத்திற்குக் கிடைக்கத் தொடங்கியது. ஏனெனில் உயர்ந்த, உலகத் தரத்திலான செயல்பாடுகளால், தெற்காசியாவில் உள்ள மிக முக்கியமான ஆவணக்காப்பகமாகவும் நூலகமாகவும் ரோஜா முத்தையா ஆராயச்சி நூலகம் வளர்ந்தது. அதன் பிறகு ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம், கல்கத்தாவைச் சேர்ந்த Centre For Studies in Social sciences, நேபாளத்தைச் சேர்ந்த மதன் புரஸ்கார் புஸ்தகலாயா, ஹைதராபாத்தைச் சேர்ந்த Sundarayya Vignana Kendram போன்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொண்டது.

சிகாகோ பல்கலைக்கழகம் தமிழ்ச் சேகரிப்புகளைப் போலவே ஓர் உருது மொழி சேகரிப்புத் தொகுப்பினை விலை கொடுத்து வாங்கி Sundarayya Vignana Kendram நிறுவனத்தில் பாதுகாக்கும் பணியை மேற்கொண்டது. அதேபோல் பூனாவில் ஒரு மராட்டிய தொகுப்பினையும் வாங்கியது. இதன்மூலம் இந்தச் சேகரிப்புகளை எல்லாம் பாதுகாத்துக் கொண்டிருந்த நிறுவனங்கள் இணைந்து செயல்பட வாய்ப்புக் கிடைத்தது.

1997இல் சங்கரலிங்கம் மறைந்து பின்பு,. இராமகிருஷ்ணனும் செயலாளர் பதவியிலிருந்து விலகினார். 2004 இல் மொழி அறக்கட்டளை சிகாகோ பல்கலைக்கழகத்துடனான நூலகத்தின் புரிந்துணர்வு ஒப்பந்தத்திலிருந்து வெளியேற முடிவுசெய்தது. அதனால் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு தனித்த அங்கீகாரம் வேண்டுமென்பதால், நான்(சுந்தர்), தியடோர் பாஸ்கரன் மற்றும் நூலகத்தின் நீண்ட நாள் நண்பரான பேரா. அப்துல் கலாம் ஆகியோர் இணைந்து ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளையைத் தொடங்கினோம். இந்த அறக்கட்டளை மூலம் சிகாகோ பல்கலைக்கழகத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தைப் புதிதாகக் கையெழுத்திட்டு, திட்டப்பணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டன. அதன்பின்னர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அனைத்து செயல்களும் நிறைவடைந்த பின்னர் எல்லா சேகரிப்புகளையும் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்திற்கு கொடையாகக் கொடுத்துவிட்டு சிகாகோ பலகலைக்கழகமும் விலகிக் கொண்டது.

ரோஜா முத்தையாவின் சேகரிப்புத் தொகுப்புகளின் நுண்பட நகல்கள் மற்றும் மின் நகல்களின் ஒரு பிரதி சிகாகோ பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டன. சிகாகோ பல்கலைக்கழகம் நுண்படங்களின் நகல்களை பென்சில்வேனியாவில் உள்ள National Underground Facilityஇல் பாதுகாப்பதற்கான முயற்சிகளைச் செய்தது.

இது ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் வரலாற்றில் நடந்த மற்றொரு மிக முக்கியமான மாற்றம் எனலாம். நூலகத்தின் தோற்றம் ஒரு வகையில் வரலாற்றுச் சிறப்புமிக்கது என்றாலும் அதன் வளர்ச்சியும் பரிமாண மாற்றமும் அதைவிட முக்கியமானது எனலாம். ஏனென்றால் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் பல்வேறு விதங்களில் நூலகம் என்பதனையும் தாண்டி ஒரு பண்பாட்டுத் தளமாக மாறி உள்ளது. 1,00,000 ஆவணங்கள் என்ற எண்ணிக்கையில் இருந்த நூலகச் சேகரிப்புகள் தற்போது 5,00,000 மேற்பட்ட ஆவணங்களாக அதிகரித்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

நூலகத்தின் தோற்றத்திற்கும் வளர்ச்சிக்கும் மொழி அறக்கட்டளை எந்தளவு பங்காற்றியதோ அதே அளவிற்கு சிகாகோ பல்கலைக்கழகமும் முக்கியப் பங்காற்றியது. இவ்வாறாக ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகம் உருவாவதற்கும் அது தற்போது உள்ள நிலையை அடைவதற்கும் சிகாகோ பல்கலைக்கழகம் துணை நின்றிருக்கிறது.

வரலாற்று ஆவணமாக விளங்கும்

தஞ்சை ஜில்லா கைடு

சு. முத்து மாலதி, உதவி இயக்குநர், RMRL

முதன்மைச் சொற்கள்: தஞ்சை, P. ராமானுஜம், சரஸ்வதி மஹால், வேளாங்கண்ணி, T. K. பழனியப்பன்



தஞ்சை ஜில்லா கைடு – தஞ்சை மாவட்ட வழிகாட்டி என்னும் இந்நூல் P. ராமானுஜம் அவர்களால் தொகுத்து திருச்சி ராஜம் பதிப்பகத்தால் 1961ஆம் ஆண்டு வெளியிடப்பட்டுள்ளது. இதன் விலை 60 நயா பைசா.

தஞ்சை ஜில்லா என்பது அந்தக் காலக்கட்டத்தில் தஞ்சாவூர், திருவையாறு, திருவாரூர், பட்டுக்கோட்டை, நாகப்பட்டினம், கும்பகோணம், மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, மாயவரம் ஆகிய ஊர்களை உள்ளடக்கி ஒரே மாவட்டமாக இருந்துள்ளது. மக்களின் வாழ்வியலுக்குத் தேவையான தகவல்களை எளிதில் அறிந்து கொள்ளும் வகையிலும், வெளியூர்களிலிருந்து தஞ்சைக்கு வருபவர்களுக்கு பயனுள்ளதாக இருக்கவேண்டும் என்ற எண்ணதோடும் இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

இந்நூலில் சென்னை மந்திரி சபை உறுப்பினரகளின் பெயர்ப்பட்டியல்கள், தஞ்சை பஸ் கால அட்டவணை, கல்லூரிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகள் குறித்த விவரங்கள், சினிமா நடிகை, நடிகர்களின் முகவரிகள், ஜவுளி வியாபாரிகளின் பயன்பாட்டிற்கான மெட்ரிக்

அளவுகள், சில முக்கிய கடைகளின் முகவரி, மருந்து வியாபாரிகளின் பெயர் பட்டியல்கள், வழக்கறிஞர்களின் பெயர்கள், ஹோட்டல்களின் முகவரிகள், காப்பித்தூள் வியாபாரிகள், ஜவுளி வியாபாரிகள், தொழிற்சாலைகள், பஸ் லாரி சம்பந்தப்பட்டவர்கள், தங்க வியாபாரிகள், பிரிண்டர்ஸ் & பப்ளிஷர்ஸ், பீடி, புகையிலை, சுருட்டு வியாபாரிகள், முக்கிய பிரமுகர்கள், புகைப்படம் எடுப்பவர்கள், டாக்டர்கள், சினிமா தியேட்டர்கள், ரேடியோ மின்சாரம் சம்பந்தப்பட்டவர்கள் போன்றோரின் முகவரி மற்றும் தொலைபேசி எண்களுடன் பட்டியல்கள் இடம்பெற்றுள்ளன.

தஞ்சாவூர் பகுதி

'தஞ்சை வரலாற்று சிறப்பு' எனும் தலைப்பில் P. ராமானுஜம் எழுதிய கட்டுரை இந்நூலில் இடம் பெற்றுள்ளது. இக்கட்டுரையில் தஞ்சையை ஆண்ட சோழர்கள் வரலாறும், அதைத் தொடர்ந்து மராட்டியர் ஆட்சி செய்த விவரங்களும் இடம்பெற்றுள்ளன.

தஞ்சாவூரில் பார்க்க வேண்டிய இடங்கள் என்ற தலைப்பில் சரஸ்வதி மஹால், Art Gallery - கலைக்கூடம், தஞ்சை பெரிய கோவில் வரலாறு, சிவகங்கைப் பூங்கா, மணிக்கூண்டு என தஞ்சாவூர் பற்றிய பல தகவல்கள் இடம்பெற்றுள்ளன.

சரஸ்வதி மஹால்

தஞ்சை அரண்மனையிலுள்ள ஒரு வாசகசாலையில் சுமார் 300 ஆண்டுகளாக, மாராட்டிய மன்னர்களும், நாயக்க மன்னர்களும் சேகரித்த சுமார் 10,000 தமிழ், தெலுங்கு, நாகரி, கிரந்தம், மராத்தி காவியங்களும், ஓலைச்சுவடிகளும் இடம்பெற்றுள்ளன.

வாசகசாலையைப் பார்வையிடுவதற்கு எந்த வித கட்டணமும் இல்லை, காலை 8 மணி முதல் மாலை 5 மணி வரை இலவசமாகப் பார்க்கலாம், புதன் கிழமை விடுமுறை போன்ற விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

Art Gallery - கலைக்கூடம்

T. K. பழனியப்பன் அவர்களின் பெரும்முயற்சியால் இக்கலைக்கூடத்தில் பல இடங்களிலிருந்து கிடைத்த சிற்பங்களையும், கல்வெட்டுக்களையும் பார்வைக்கு வைத்துள்ள விவரமும், அவற்றைப் பார்ப்பதற்கான நேரம், கட்டண விவரங்களும், அது தர்பார் ஹால் ஷகாஜி என்ற மகாராஷ்டிர மன்னரால் கட்டப்பட்டது என்கிற செய்தியும் இந்நூலில் இடம் பெற்றுள்ளன.

திருவையாறு பகுதி

திருவையாறு ஸ்தல வரலாறு என்கிற குறிப்பிலிருந்து, தஞ்சாவூரிலிருந்து திருவையாறு போகும் வழியில் ஐந்து ஆறுகளைக் கடந்து போகவேண்டியிருப்பதால் இவ்வூர் திருஐயாறு என்றும், திருவையாறு என்று அழைக்கப்படுகிறது என்கிற ஊர்ப்பெயர் வரலாற்றை அறிந்து கொள்ள முடிகிறது.

திருவாரூர் பகுதி

திருவாரூர் பகுதியில் திருவாரூர் ஸ்தல வரலாறு என்ற தலைப்பில் ஒரு கட்டுரை இடம் பெற்றுள்ளது. அதில் திருக்காரயில், திருக்குவளை, திருநாகை, திருநள்ளாறு, திருவாய்மூர், திருமறைக்காடு ஆகிய 6 ஊர்களின் தலைமையிடமாக விளங்குவதால் இவ்வூருக்கு திரு ஆருர் என்று பெயர் வந்தது என்பதை அறிந்துகொள்ள முடிகிறது. இவ்வூரில் தஞ்சை மாவட்ட உயர்நிலைப் பள்ளியும், பெண்களுக்கான நடுநிலைப் பள்ளியும், ஆண்-பெண் இருபாலரும் பயில்வதற்கான ஐந்து நடுநிலைப் பள்ளிகளும், பல தொடக்கப் பள்ளிகளும், மாணவர் இல்லம் ஒன்றும் இருந்ததாகக் கூறும் செய்திகளையும் அறிந்து கொள்ளமுடிகிறது.

பட்டுக்கோட்டை – நாகப்பட்டினம் - கும்பகோணம்

பட்டுக்கோட்டை பற்றிய பகுதியில் அந்த நகரம் குறித்த செய்திகள் இடம்பெற்றுள்ளன. நாகப்பட்டினம் குறித்த பகுதியில் வேளாங்கண்ணி திருத்தலம் என்ற தலைப்பில் S. L. கப்ரியேல் ஒரு வரலாற்றுக் கட்டுரையை எழுதியிருக்கிறார். அத்திருதலம் கத்தோலிக்கத் திருமறையைச் சேர்ந்தது என்றும் அது ஆரம்பமாகி ஏறக்குறைய நான்கு நூற்றாண்டுகள் ஆன பின்னரும், 35 ஆண்டுகளுக்கு முன் அழகுற அக்கோயிலைக் கட்டி முடித்தவர் சங். நொரோனா சுவாமிகள் என்ற செய்தியை அறிந்து கொள்ள முடிகிறது. மேலும் காயரோகணஸ்வாமி கோவில், சவுந்தர்ராஜப்பெருமாள் கோவில், நெல்லிக்கடை மாரியம்மன் கோவில், நாகப்பட்டினம், நாகூர் தர்கா பற்றிய தகவல்களும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன.

கும்பகோணம் என்ற பகுதியில் கும்பகோணத்தைச் சுற்றி உள்ள கோவில்கள் பற்றிய ஸ்தல வரலாற்றுக் கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. இதுபோன்று மன்னார்குடி, திருத்துறைப் பூண்டி, மாயூரம் பகுதிகள் பற்றிய பல தகவல்கள் இந்நூலில் இடம்பெற்றுள்ளன.

Digital library in J-ISIS

R. Prakash, Director Operations RMRL

Keywords: CDS/ISIS, J-ISIS, FOSS, Digital Library, MARC 21

Introduction

The internet has added a new dimension to information retrieval systems by breaking ground with the concept of digital libraries. Now digital libraries have emerged as vital component in the global sharing of information. Software plays a crucial role in developing digital libraries in existing libraries.

Brief history of ISIS family

CDS/ISIS (Computerised Documentation Service / Integrated Set of Information Systems) is a menu-driven package for a generalized Information Storage and Retrieval system designed for computerized management of structured non-numeric databases. It was developed, maintained and disseminated by UNESCO and first released in 1985.

The original CDS/ISIS was designed in 1970s under the supervision of Giampaolo Del Bigio for UNESCO's Computerized Documentation System (CDS) and it ran on an IBM mainframe computer. It was based on the internal ISIS (Integrated Set of Information Systems) at the International Labour Organization in Geneva.

In 1985, a version was written in Pascal for mini-and micro-computers. The WinISIS was released in 1995. A JavaISIS client/server component was designed in 2000, allowing remote database management over the Internet from Windows, Linux and Macintosh computers. GenISIS allows the user to produce HTML Web forms for CDS/ISIS database searchingThe most recent effort towards a completely renewed Free Open Source Software (FOSS), Unicode implementation of CDS/ISIS is the J-ISIS project, developed by UNESCO since 2005 and currently maintained by Jean Claude Dauphin.

J-ISIS

J-ISIS or Java ISIS is new information storage and retrieval database software capable of handling digital library application. J-ISIS is a Java-based graphical interface that uses Java technology. J-ISIS was developed from the beginning with Unicode in mind and under the Open Source philosophy.

J-ISIS has adopted technologies based on Berkeley DB for the management of records of variable length, as well as Lucene for indexing and data retrieval, while maintaining the typical ISIS-family formatting language.

Methodology

A. Installation

- Download J-ISIS from https://github.com/J-ISIS/J-ISIS/releases/tag/v1.3.3
- Download and install Java 8 update 101
- Copy the extracted J-ISIS_suite to local drive [C:\]

B. Creating a new database for the Digital library

Creating a database in ISIS family of software uses the same steps, namely:

1. Defining fields in the database (Field definition table)
2. Creating a worksheet for data entry (Data entry worksheet)
3. Defining fields for indexing (Field selection table)
4. Formatting for display/Print (Pft)

Defining the database

ISIS family of software provides facilities to create any type of database and it is very flexible to handle any field type. Other aspects would be designing the display format and assigning fields for indexing. When compared to other FOSS like Koha, J-ISIS is more flexible and user friendly.

Field definition table: J-ISIS supports MARC 21 format and other metadata schemes. The fields relevant to books are given in the database in MARC 21 format.

The descriptive and access fields are repeated to handle Tamil and equivalent Roman script. The subfields were assigned as per the MARC format. The field 856 electronic location was assigned as a "DOC" type, which will link to the digital object.

Tag	Name	Type	Indicators	Rep.	1st Subfi...	Subfields/Pattern
8	008-Control field	0	☐	☐	☐	
40	Cataloguing ageny	0	☐	☐	☐	ac
82	DDC	0	☐	☐	☐	a
100	Author	0	☐	☑	☐	acdq
240	Uniform Title	0	☐	☑	☐	akl
245	Title	0	☐	☑	☐	abcnp
246	Varying Title	0	☐	☑	☐	a
250	Edition	0	☐	☑	☐	a
260	Imprint	0	☐	☑	☐	abc
300	Pagination	0	☐	☑	☐	abc
490	Series	0	☐	☑	☐	av
500	Note	0	☐	☑	☐	a
504	Bibliographical Note	0	☐	☐	☐	
520	Summary	0	☐	☐	☐	
541	Donation	0	☐	☑	☐	acd
546	Language	0	☐	☑	☐	a
600	Subject-Name	0	☐	☑	☐	acdtvx
610	subject-Corporate	0	☐	☑	☐	a
630	Subject-Title	0	☐	☑	☐	px
650	Subject headings	0	☐	☑	☐	avxz
653	Keywords	0	☐	☑	☐	a
700	Editor/Complier/Translator	0	☐	☑	☐	acdet
856	Electronic File location	17	☐	☑	☐	
900	Shelf Mark	0	☐	☑	☐	abd

Data entry worksheet: Creating a worksheet is very simple where the defined fields or selected fields need to be moved to the data entry module.

ields Defined in the FDT:

Tag	Name	Type	Indicators	Rep.	1st Subfield	Subfields/Pattern
541	Donation	0	☐	☑	☐	acd
546	Language	0	☐	☑	☐	a
600	Subject-Name	0	☐	☑	☐	acdtvx
610	subject-Corporate	0	☐	☑	☐	a
630	Subject-Title	0	☐	☑	☐	px
650	Subject headings	0	☐	☑	☐	avxz
653	Keywords	0	☐	☑	☐	a
700	Editor/Complier/Translator	0	☐	☑	☐	acdet
856	Electronic File location	17	☐	☑	☐	
900	Shelf Mark	0	☐	☑	☐	abd

Vorksheet Definition

Tag	Description	Display	Size	Default	Help Message	Validation	Pick List
8	008-Control field						
40	Cataloguing ageny						
82	DDC						
100	Author						
240	Uniform Title						
245	Title						
246	Varying Title						
250	Edition						
260	Imprint						
300	Pagination						
490	Series						

Field selection table: The selected fields can be assigned relevant indexing techniques. For instance, indexing technique 4 was given to field 245. It allows indexing each word in the field.

Available Fields

Tag	Name	Type	Indicators	Rep.
8	008-Control field	0	☐	☐
40	Cataloguing ageny	0	☐	☐
82	DDC	0	☐	☐
100	Author	0	☐	☑
240	Uniform Title	0	☐	☑
245	Title	0	☐	☑
246	Varying Title	0	☐	☑

Field Selection Table

ID	Name	Technique	
8	Year	1 - Subfields & lines	v8*7.4
100	Author	1 - Subfields & lines	(v100^a/)
245	Title	1 - Subfields & lines	(v245^a/)
247	KW_Title	4 - Each word in extracted text	v245^a
600	Sub_name	1 - Subfields & lines	(v600^a/)
650	Subject	1 - Subfields & lines	(v650^a/)
653	Keywords	1 - Subfields & lines	(v653^a/)

Formatting for display: The bibliographical data as well as a link to the digital file can be given in the display format. J-ISIS supports CSS and HTML specifications.

```
'<head>'
'<style>'
'body{'
'background-color:#d6d3cd;'
'}'
'table {'
'background-color:#d6d3cd;'
'border-collapse:collapse;'
'width:100%;'
'}'
'td {'
'font-family: "Arial unicode MS";'
'font-size: 15px;'
'background-color:#d6d3cd;'
'border:1px solid #eee;'
'}'
'</style>'
'</head>'
'<TABLE>'/
'<TABLE>'/
if p(v100) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Author </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v100^a,|, |v100^c/),'</TD></TR>'/fi,
if p(v240) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Uniform Title </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v240^a,| |v240^p,|. |v240^n,|. |v240^k,|. |v240^l/),'</TD></TR>'/fi,
if p(v245) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Title </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v245^a,| : |v245^b,| = |v245^z,|. |v245^n,|. |v245^p,| / |v245^c/),'</TD></TR>'/fi,
if p(v250) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Edition </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v250^a/),'</TD></TR>'/fi,
if p(v260) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Publication </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(if p(v260^a) then v260^a,| : |v260^b,|, |v260^c else v260^c fi /)'</TD></TR>',fi
if p(v300) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Physical Details </I></TD><TD>',v300^a," : "v300^b," ; "v300^c'</TD></TR>',fi,/
if p(v490) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Series  </TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v490^a,|; |v490^v/)'</TD></TR>',fi,/
if p(v500) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Note </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v500^a/)'</TD></TR>',fi,/
if p(v504) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Bibliography Note </I></TD><TD>',(v504^a/)'</TD></TR>',fi,/
if p(v546) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Language </I></TD><TD>',(v546^a/)'</TD></TR>',fi,/
if p(v600) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Subject </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v600^a,", "v600^c,", "v600^d,". "v600^t," - "v600^v," - "v600^x/)'</TD></TR>',fi,/
if p(v650) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Subject </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v650^a,| - |v650^x,| - |v650^v,| - |v650^y,| - |v650^z/)'</TD></¯R>',fi,/
if p(v700) then '<TR><TD WIDTH="30%"><font size="4">Editor, Translator, etc. </I></TD><TD><font face="Arial Unicode MS" color="black">',(v700^a,|, |v700^c,|. |v700^t/)'</TD></TR>',fi,/
```

Setting up Digital library database:

The bibliographical data relevant to the particular book was entered in the data entry worksheet. Record was created based on rules described in AACR2 and MARC format. The Tamil equivalent to Roman script was converted using Google translate and verified with ALA-LC Romanization table. The personal names were checked with the Library of Congress Authorities and the authorized headings were used in the database. LCSH subject headings were used to assign subject headings.

Linking digital objects:

J-ISIS is flexible database system. Therefore, we can handle digital library components in two ways. The first method is by providing links to digital files in the database. The field 856 is assigned as 'Doc' in the database which will enable linking to any digital file. The tool will be activated in 856 field and appropriate files can be selected and stored in C:\J-ISIS_suite\home_example_db \Digitallib\idocs. In this method, database will take less memory space.

We can recall the file in the display by clicking the link.



Output

The digital file can be viewed by clicking the link provided in the display.

Author	அகிலன், 1922-1988. Akilan, 1922-1988.
Title	செங்கரும்பு / அகிலன். Ceṅkarumpu / Akilan.
Edition	1. பதிப்பு. 1. patippu.
Publication	சென்னை : அமுத நிலையம், 1952. Cennai : Amuta Nilaiyam, 1952.
Physical Details	94 p. ; 18 cm.
Series	அமுதம்; 38
Note	Short stories
Full text view	cenkarumpu.pdf

Indexing

J-ISIS has a powerful indexing system that automatically indexes the assigned fields. The words in the full-text can be indexed. Through indexing we can easily search for terms in J-ISIS database system.

Conclusion:

J-ISIS is a server-client software. By using Apache Tomcat, the database can be searched in a browser. It can be accessed both for intranet and internet users. Creating a digital library thus becomes very simple using J-ISIS. Powerful feature of the ISIS technologies are it occupies less memory space, easily maintain the database, option for creating various display formats by using formatting language, which now supports html and CSS coding.

காவேரிபூம்பட்டினத்தின் கதை

ஆர். விஜயசங்கர், இயக்குநர், ஆராய்ச்சி மற்றும் பதிப்புத் துறை RMRL

முதன்மைச் சொற்கள்: காவேரிபூம்பட்டினம், சிலப்பதிகாரம், பூம்புகார், இரா. நாகசாமி, மருவூர்ப்பாக்கம்



தமிழ்ப் பண்பாட்டு வரலாற்றின் பிரிக்க முடியாத ஓர் அடையாளம்தான் பூம்புகார் என்று பரவலாக அறியப்படும் காவேரிபூம்பட்டினம். கடல் கொண்ட புராதன நகரம் என்று பெயர் பெற்ற காவேரிபூம்பட்டினம் பற்றிய குறிப்புகளும், கவித்துவம் மிகுந்த விவரணைகளும் சங்கத் தமிழ் இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய காப்பியங்களிலும் கொட்டிக் கிடக்கின்றன. சிலப்பதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டு 1942இல் 'கண்ணகி' என்றும், 1964இல் 'பூம்புகார்' என்றும் (கலைஞர் கருணாநிதி திரைக்கதை, உரையாடல் எழுதியது) வெளிவந்த திரைப்படங்களிலும் காவேரிபூம்பட்டினம் கதைக்களமாக இருந்தது.

இந்த அரிய விவரங்களின் எளிய தொகுப்பாக திரு. இரா. நாகசாமி எழுதிய 'Kaveripoompattinam - A Guide' (காவேரிபூம்பட்டினம் - ஒரு கையேடு) என்கிற நூல் தமிழ்நாடு தொல்லியல் துறையால் சில ஆண்டுகளுக்கு முன் வெளியிடப்பட்டது. அதிலிருந்து ஒரு சில துளிகள்: காவேரி கடலில் புகும் இடம் என்பதால் காவேரிபூம்பட்டினம் என்கிற பெயர் வந்திருக்கிறது.

பட்டினப்பாலை, சிலப்பதிகாரம், மணிமேகலை ஆகிய இலக்கியங்களில் மாயா என்கிற தெய்வீகக் கட்டிடக் கலைஞர் தமிழகம் போற்றியதாகக் குறிப்புகள் இருக்கின்றன. இவர் கையாண்ட கட்டிடக்கலை, நகர அமைப்பு விதிகளின்படி காவேரிபூம்பட்டினம் உருவாக்கப்பட்டிருக்கலாம் என்றும் இரா. நாகசாமி கூறுகிறார்.

இந்த நகரம் பட்டினப்பாக்கம், மருவூர்ப்பாக்கம் என இரண்டாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பட்டினப்பாக்கத்தில் அரசர், அமைச்சர்கள், அதிகாரிகள், செல்வந்தர்கள் போன்ற மேட்டுக் குடிகளும், ராணுவத்தினரும் வசித்தனர். மருவூர்பாக்கத்தில் சிறு வணிகர்கள், கைவினைனர்கள் போன்றோரும் வாழ்ந்தனர். இவை தவிர கடற்கரையை ஒட்டிய பகுதியில் மீனவர்கள் வசித்தனர். யவனர்கள் எனப்பட்ட அன்னிய வணிகர்களுக்கென ஒரு குடியிருப்பும் இருந்தது. இந்திரன், சூரியன், சிவன், விஷ்ணு ஆகிய கடவுள்களுக்கான கோவில்களும் இருந்தன.

காவேரிபூம்பட்டினம் கடலுக்குள் மூழ்கியது என்று மணிமேகலை கூறுகிறது. ஆனால் அந்த நகரத்தைக் குறித்து மணிமேகலையில் வரும் விரிவான குறிப்புகளைக் காணும்போது அது முழுவதும் கடலுக்குள் மூழ்கவில்லை அல்லது கடலின் ஒரு பகுதி பின்வாங்கிய காலத்தில் மறு நிர்மாணம் செய்யப்பட்டது என்று யூகிக்கலாம் என்கிறார் இரா. நாகசாமி.

நம்மை வியப்பிலாழ்த்தும் ஒரு தகவல்: காவேரிபூம்பட்டினத்தைப் பற்றிய முதல் குறிப்பு வட இந்தியாவின் பர்ஹூத் என்கிற இடத்திலிருக்கும், கி.மு. இரண்டாம் நூற்றாண்டைச் சேர்ந்த பிராகிருத மொழிக் கல்வெட்டில் காணலாம். அசோகரால் நிர்மாணிக்கப்பட்ட ஒரு ஸ்தூபியில் காணப்படும் இக்குறிப்பு அந்த ஸ்தூபியில் வைப்பதற்காக ஒரு கல் பலகையை காகண்டி என்கிற நகரத்தைச் சேர்ந்த சோமா என்கிற புத்தத் துறவி அசோகருக்குப் பரிசளித்தாகக் கூறுகிறது. காவேரிபூம்பட்டினத்தின் பல பெயர்களில் ஒன்றுதான் காகண்டி என மணிமேகலை கூறுகிறது. காவேரிபூம்பட்டினம் அந்தக் காலத்தில் வளம் பொருந்திய நகரமாக இருந்ததென்று இக்குறிப்பிலிருந்து தெரிகிறது. கி.பி. 8ஆம் நூற்றாண்டு வரை அது ஒரு புத்தமத மையமாகவும் இருந்ததாகவும் தெரிகிறது. புத்தமத நூலான மிலிந்தபாணா இந்த நகரத்தை கோலிபட்டினா என்று குறிப்பிடுகிறது.

மணிமேகலையிலும், சிலப்பதிகாரத்திலும் புகழ்பெற்ற பகுதி இந்திர விழாவாகும். கால்நடை மேய்ச்சல் இனங்களைச் சேர்நத மக்களின் மதத்தில் வழிபடப்பட்ட தெய்வமான இந்திரனுக்கு வசந்த காலத்தின் துவக்கத்தின் எடுக்கப்பட்ட விழாதான் இது. அறுவடை முடிந்து நடக்கும் இந்த வசந்த விழாவைப் பற்றிய பாடலுடன்தான் மணிமேகலையே துவங்குகிறது. இப்படிப்பட்ட அரிய, எளிய நூல் ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலகத்தின் சேகரிப்புகளில் ஒன்று என்பது பெருமைகுரிய விஷயம்.

MAY 2025 |VOL.2, ISSUE NO. 5

தமிழில் நூல், புத்தகம் என்ற சொற்கள்

சில விவாத குறிப்புகள் - பகுதி 02

முனைவர் சே. தனபால், ஆய்வாளர், RMRL

முதன்மைச் சொற்கள்: நூல், புத்தகம், பதிப்பு, திருக்குறள், நாலடியார், பொஸ்த்தகம்



அக்கியானம்

கடந்த மாத (ஏப்ரல், 2025) செய்திமடலில் இந்தத் தொடர்விவாதக் குறிப்புகளின் முதல் பகுதி வெளியானது. அதில் தொல்காப்பியம், சங்க இலக்கியம், பதினெண்கீழ்க்கணக்கு, காப்பியங்கள், இடைக்கால இலக்கியங்கள் உள்ளிட்டவற்றில் ‘நூல், புத்தகம்’ என்ற சொற்கள் பயின்று வந்துள்ள முறையைப் பற்றிய எடுத்துரைக்கப்பட்டது. அதில் சமஸ்கிருதச் சொல்லான ‘பொஸ்தக’ என்பது தமிழில் ‘புத்தகம்’ என்று பயன்படுத்தப்படுவதைக் குறிப்பிட்டிருந்தோம். தமிழில் அச்சு நூல்கள் வெளிவர தொடங்கியதும் ‘பொஸ்தக’ எவ்வாறு ‘புத்தகம்’ ஆனது என்பதைப் பற்றிய குறிப்புகளை இந்த இரண்டாம் பகுதியில் காணலாம்.



ஞானப்பாட்டுகளின் பொஸ்த்தகம்



வேத பொஷ்த்தகம்

பொஸ்த்தகம் என்ற சொல்

தமிழ்நாட்டில் தரங்கம்பாடியில் 1712ஆம் ஆண்டு சீகன்பால்கு (1683-1716) என்கிற ஜெர்மன்-டேனிஷ் பாதிரியாரால் முதல் அச்சுக்கூடம் நிறுவப்பட்டது. தொடர்ந்து, 1713ஆம் ஆண்டில் பொறையாறு என்ற ஊரில் அச்சு வார்ப்புச்சாலையும் (type-foundry) 1715ஆம் ஆண்டில் காகித ஆலையையும் உருவாக்கப்பட்டன. 1713ஆம் ஆண்டு, “அக்கியானம் எத்தினை அருவருக்கப்படத்தக்க காரியம் என்றும் அதிலே நிக்கிற பேர்கள் எப்படி ரஷிக்கப்பட்டு கரை ஏறலாம் என்றும் வெளிப்படுத்துகிற வேதப்பிறமாணம்” என்ற ஒரு நூலை சீகன்பால்கு எழுதி, அச்சிட்டார். இந்நூலின் முதல் பக்கதிலேயே இந்தத் தலைப்பிற்குக்கீழ், “பாதரிமார்களுடைய அச்சிலே போடப்பட்ட பொஷ்த்தகம்” என்று அச்சிடப்பட்டுள்ளது.

1714ஆம் ஆண்டு வெளியான சீகன்பால்கு மொழிபெயர்த்த தமிழ்ப் பைபிள் நூலுக்கு “வேத பொஷ்த்தகம்” என்று தலைப்பிட்டார். இத்துடன், 1797 ஆம் ஆண்டு “ஞானப்பாட்டுகளின் பொஸ்த்தகம்” என்றொரு நூலும் வெளியாகி உள்ளது. இவற்றைத் தொடர்ந்து, 1779ஆம் ஆண்டு “தமிழும் இங்கிலேசுமாயிருக்கிற அகராதி” (A Dictionary Malabar and English) என்ற நூல் மெட்ராஸ் வேப்பேரி அச்சகத்தில் அச்சடிக்கப்பட்டு வெளிவந்தது.

அதில் * என்ற குறியீடோடு ‘பொஸ்த்தகம் – a book’ (ப.143) என்ற சொல் இடம்பெற்றுள்ளது. அகராதியின் தொடக்கத்திலேயே * என்பதற்கான பொருள் பின்வருமாறு கொடுக்கப்பட்டுள்ளது, “* Is the Sign of Grandam-Words which have become usual in the Malabar Language.”

ஐரோப்பியர் வருகையின் தொடக்கக் காலத்தில் ‘மலபார்’ என்பது தமிழ் மொழியைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. இத்துடன் இந்த அகராதி ‘பொஸ்த்தகம்’ என்பது கிரந்த சொல் என்றும் தமிழ் மொழியில் வழக்கமாக மாறிவிட்டதென்று குறிப்பிடுவதும் நோக்கத்தக்கது. கிரந்தம் என்பது சமஸ்கிருதத்தை எழுதுவதற்குத் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்பட்ட எழுத்து முறையாகும்.

1807ஆம் ஆண்டில் Innocent Nicholas என்பவரால் உருவாக்கப்பட்ட "Vocabulary of English and Tamul Words" என்ற நூல் வெளிவந்துள்ளது. இது தமிழ் மொழிச் சொற்களைக் கற்பதற்கான கருவி நூலாகும். இந்நூலில் இடம்பெற்றுள்ள இரண்டு முக்கியமான சொற்கள் பின்வருமாறு:

A library - பொஸ்த்தகசாலை
A book - ஒரு பொஸ்த்தகம், சுவடி

1811ஆம் ஆண்டு தமிழ்க் குறித்தும், தமிழ் மொழிக் குறித்தும் கேள்வி-பதில் தன்மையில் தமிழும் ஆங்கிலமும் இணைந்து 'தமிழ் விளக்கம் The Tamel Expositor' என்கிற நூல் வெளியானது.

இதனை திருவேற்காடு சுப்பறாய முதலியார் தொகுத்து, ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டுள்ளார். இதில் அவர், 'பொஸ்த்தகம்' என்ற சொல்லை அச்சுநூல் என்ற பொருளில் பயன்படுத்தியுள்ளார்.





மேற்கண்ட பல்வேறு நூல்களின்வழி நோக்கும்போது, 18ஆம் நூற்றாண்டிலும் 19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்திலும் சமஸ்கிருதச் சொல்லான 'பொஸ்தக' என்னும் 'பொஸ்த்தகம்' என்கிற சொல் பெருவழக்காக அச்சுநூலைக் குறிப்பதற்குப் பயன்படுத்தப்பட்டிருப்பதை அறியலாம். ஆனால், 1812ஆம் ஆண்டு வெளிவந்த 'திருக்குறள் நாலாடியார் மூலப்பாடம்' என்கிற நூல் ஒரு புதிய திறப்பை உண்டாக்குகியது.

திருக்குறள் நாலடியார் மூலப்பாடம் 1812ஆம் ஆண்டு பதிப்பு

19ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் அச்சிடப்பட்ட திருக்குறள் நாலடியார் மூலபாடம் தமிழ் இலக்கிய நூல்களின் பதிப்பு வரலாற்றில் முதன்மையானதாகும். இது மாசத்தினச்சரிதையின் அச்சுக்கூடத்தின் வழி வெளியிடப்பட்டுள்ளது. இந்நூலின் முகப்புப் பக்கத்தில் 'இது ______ பொத்தகம்' என்று அச்சிடப்பட்டுள்ளது. இதில் காணப்படும் இடைவெளி, இந்த நூலை வாங்குபவர் தனது பெயரை அவ்விடத்தில் எழுதிக் கொள்வதற்கு விடப்பட்டதாகும்.

அதன்மூலம் இது இன்னாருடைய நூல் என்பது புலனாகும். (இந்நூல் குறித்து விரிவாக அறிய, “தமிழ் நூல் பதிப்பு வரலாற்றில் திருக்குறள் 1812” (RMRL Newsletter: January 2025, Vol. 2, issue no. 1) என்ற கட்டுரையைக் காண்க.)

இப்பதிப்பில் பயன்படுத்தப்பட்டிருக்கும் ‘பொத்தகம்’ என்ற சொல் ‘பொஷ்த்தகம், பொஸ்த்தகம்’ ஆகிய சொற்களில் உள்ள ‘ஷ், ஸ்’ என்ற சமஸ்கிருத ஒலிகள் நீக்கப்பட்டு, தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளது. இதனைத் தொல்காப்பிய விதியோடு இணைத்து நோக்கலாம்.

தொல்காப்பியர் செய்யுளில் இடம் பெறும் சொற்களை இயற்சொல், திரிசொல், திசைச்சொல், வடசொல் என்ற நால்வகைகளில் ஒன்றாக வடசொல்லைக் குறிப்பிட்டதோடு மட்டுமல்லாமல், வடசொற்களைத் தமிழில் எழுதும்போது மேற்கொள்ள வேண்டிய விதிகள் குறித்தும் வகுத்தளித்துள்ளார்.

வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே
(தொல். சொல். 395)

அதாவது வடமொழி சொல்லில் உள்ள வடமொழி ஒலிகளை நீக்கித் தமிழ்மொழி எழுத்துகளோடு அமைக்க வேண்டுமென்பதை இவ்வரிகள் சுட்டுகின்றன. இத்துடன்

சிதைந்தன வரினும் இயைந்தன வரையார் (தொல். சொல். 396)

என சிதைந்து வருவனவற்றையும் நீக்காமல் ஏற்றுக் கொள்ளலாம் என்றும் தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

இந்த முறையியலையே 1812ஆம் ஆண்டு வெளிவந்த ‘திருக்குறள் நாலடியார் மூலபாடம்’ நூல் பின்பற்றியுள்ளது எனலாம். இப்பதிப்புரை, உரைகள் உருவாக்குவதற்கான கருவி நூலாகக் கொள்ள வேண்டும் என இதனைப் பதிப்பித்த திருநெல்வேலி அம்பலவாணக் கவிராயர் குறிப்பிட்டுள்ளார். அவரே ஓலைச்சுவடிகளிலிருந்து பதிப்பில் கொண்டுவரும்போது உண்டாகும் பிழைகளைத் திருத்தியதாகவும் இதனைத் திருவாவடுதுறை ஆதீனவித்துவான் அம்பலவாணத் தம்பிரான், சீர்காழி வடுகநாத பண்டாரம் “மறுபடி கண்ணோட்டத்துடன்” ஆராய்ந்தாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனை இன்னும் அழுத்தமாக “இலக்கண இலக்கிய ஆராய்ச்சி உடையவர்களால் ஆராய்ந்து சுத்தபாடமாக்கப்பட்டது” என்று இப்பதிப்பில் காணப்படும் குறிப்பின்வழியும் அறியலாம். இவற்றின்வழி

திருககுறள

மூலபாடம

தெயவபபுலமைத திருவளளுவநாயனா
அருளிசசெயதது.

இலககணவிலககியவாராயசசி யுடையவாகளாலிகிதப
பிழைய றவாராயநது சுததபாடமாககபபடடது.

இது

பொததகம

கலியுகாபதம சதகஙா சி. கரு ஆஙகிரஸ
தொணடமணடலம சென்னபடடணததில
தஞசைநகரம-மலயபப பிளளைகுமாரன
ஞானபிறகாசகுல
அசசிறபதிககபபடடது.

மாசதினசசரிதையின அசசுககூடம
இ. ஆணடு ௲௮௱௰௨.

திருக்குறள் 1812 முகப்பு

நோக்கும்போது ஓலைச்சுவடியில் இருந்து பிழைகளை நீக்குதல், அதனை ஆராய்ந்தல் எனக் கவனத்துடன் இந்தப் பதிப்பு உருவாக்கப்பட்டுள்ளது. ஒருவகையில் இப்பதிப்பு ஒரு தரநிலைப்படுத்துதலை நோக்கிய செயல்பாடாக அமைந்தது எனலாம்.

இச்செயல்பாடுகளின் ஒரு பகுதியாகவே ’பொஸ்த்தகம்’ என்ற சொல்லிற்கு மாற்றாக ‘பொத்தகம்’ என்று தமிழ்ப்படுத்தியுள்ளனர் என ஊகித்து அறியலாம். ‘பொஸ்த்தம்’ என்ற கிரந்த வடிவில் இருந்த சொல், இங்குதான் ‘பொத்தகம்’ என்று முதன்முறை தமிழ்ப்படுத்தப்பட்டுள்ளதும் கவனிக்கத்தக்கது.

நாலடியாரும் பொத்தகமும்

புத்தகம் என்ற சொல் தமிழ் இலக்கிய நூல்களில் பதிணென்கீழ்க்கணக்கு நூல்களான நாலடியார், ஏலாதி ஆகிய இரண்டில்தான் முதன்முதலில் பயன்படுத்தப்பட்டுள்ளது முதல் பகுதியில் பார்த்தோம். 1812ஆம் ஆண்டு வெளியான நாலடியார் மூலப்பாடம் பதிப்பில் சீர்பிரிக்காமல், புள்ளியில்லாமல் ஓலைச்சுவடியில் இருப்பதைப் போன்று அமைந்த அந்த நாலடியார் 318ஆம் செய்யுள் பின்வருமாறு,

நாலடியார் மூலப்பாடம்

பொததகமெசாலததொகுததுமடொருடெரியா
ருயததகமெலலாநிறைபபினுமறறவறறை
பொறறுமபுலவருமவெறெபொருடெரிநது
தெறறுமபுலவருமவெறு

இச்செய்யுள் சீர்பிரித்து, புள்ளியுடன் பின்வருமாறு,

பொத்தகமே சால தொகுத்தும் பொருள் தெரியார்
உய்த்து அகம் எல்லாம் நிறைப்பினும் மற்று அவற்றை
போற்றும் புலவரும் வேறே பொருள் தெரிந்து
தேற்றும் புலவரும் வேறு

இச்செய்யுளின் பொருள்வழி நோக்கும்போது ‘பொத்தகம்’ என்பது ஓலைச்சுவடிகளைச் சுட்டுவதாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது. இருப்பினும் பொருள் அளவில் ‘பொத்தகம்’ என்ற சொல் அச்சுநூலைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளதை “இது _____ பொத்தகம்” என்று முகப்பில் அமைக்கப்பட்டிருப்பதே சான்றாகும். மேலும் இப்பதிப்பின் வரலாறு பகுதியில் இடம்பெற்றிருக்கும் வாக்கியம் பின்வருமாறு,

“கற்றுணர்ந்த தமிழாசிரியர்களருமையி னியற்றிய -
இலக்கணவிலக்கியங்களாகிய - அரியநூல்களெல்லாம் இந்நாட்டில்
அச்சிற்பதிக்கும்....”

இதில் ‘நூல்’ என்ற சொல் இலக்கியச் சுவடிகளைச் சுட்டுவதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இது முதல் பகுதியில் எடுத்துரைக்கப்பட்ட வரையறையின் தொடர்ச்சியாகும்.

மெட்ராஸ் ஸ்கூல் புக் சொசைட்டி (Madras School Book Society)

1820ஆம் ஆண்டு மெட்ராஸ் மாகாணத்தில் அன்றைய கவர்னராக இருந்த தாமஸ் மன்றோவின் முன்னெடுப்பில் பல்வேறு நபர்கள் இணைந்து மெட்ராஸ் ஸ்கூல் புக் சொசைட்டி (Madras School Book Society) என்ற அமைப்பை உருவாக்கினர்.

இந்த அமைப்பு ஆங்கிலம் மற்றும் உள்ளூர் மொழிகளைக் கற்க தொடக்கநிலை நூல்களை உருவாக்குதல், தொகுத்தல், அச்சிடுதல் முதலிய செயல்பாடுகளை முன்னெடுத்தது. அதன்படி மெட்ராஸ் ஸ்கூல் புக் சொசைட்டி தமிழும் நூல்களை வெளியிட ஆரம்பித்தது. இந்த அமைப்பிற்கு தமிழில் வைத்த பெயர், "பள்ளிக்கூடப் புத்தகச் சாலையார்" என்பதாகும்.

இதன்வழி தமிழில் 1825ஆம் ஆண்டு "கணிததீபிகை" என்னும் நூலை வெளியிட்டுள்ளனர். அதில், "பள்ளிக்கூடப் புத்தகச் சாலையார்" செலவினால் வேப்பேரியில் அச்சிடப்பட்டது என்று அச்சிட்டுள்ளனர். இந்த இடத்தில்தான் 'பொத்தகம்' என்ற சொல் மாறி தற்காலத்தில் புழக்கத்தில் இருக்கும் 'புத்தகம்' என்ற சொல் பயன்பாட்டிற்கு வருகிறது எனலாம்.

இதற்கடுத்து, குறிப்பாக 1812ஆம் ஆண்டு வெளிவந்த 'திருக்குறள் நாலடியார் மூலபபாடம்' பதிப்பைப் போன்றே 1834ஆம் ஆண்டு வெளிவந்த 'திருக்குறள் நாலடியார் மூலப்பாடம்' நூலின் ஒரு பதிப்பு வெளியாகி உள்ளது. இந்தப் பதிப்பு சென்னைக் கல்விச் சங்கத்தின் அதிபரான மேம்பட்டட துரையவர்களின் கட்டளையினால் உருவாக்கப்பட்டுள்ளது என்ற குறிப்புக் காணப்படுகிறது. இப்பதிப்பைப் பழுதராய்ந்தவர் தமிழ்த் தலைமைப் புலமை தாண்டவராய முதலியார். இதனைப் பதிப்பித்தவர் முத்துச்சாமி பிள்ளை. இப்பதிப்பில் நாலடியார் 318ஆம் செய்யுளில் 'பொத்தகம்' என்பதற்குப் பதிலாக 'புத்தகம்' என்றே பயன்படுத்தப்பட்டுள்ளது. இதன்வழி நோக்கும்போது 'புத்தகம்' என்பதே பொதுவழக்காக மாறி, அடுத்தடுத்து பயன்பாட்டில் கொண்டுவரப் பட்டிருக்கலாம்.

மேற்கண்ட பல்வேறு தரவுகளின்வழி நோக்கும்போது, 19ஆம் நூற்றாண்டின் தொடக்கக் காலத்தில் 'புத்தகம்' என்பது அச்சுநூலைக் குறிப்பதற்கும் 'நூல்' என்பது ஓலைச்சுவடிகளைக் குறிப்பதற்குப் பயன்படுத்தத் தொடங்கியதற்கான கூறுகள் வெளிப்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

19ஆம் நூற்றாண்டின் நடுபகுதியில் இருந்து தமிழில் எண்ணற்ற நூல்கள் அச்சில் வெளிவர ஆரம்பித்தன. பண்டைய தமிழ் செவ்வியல் இலக்கியங்களும் அச்சில் வெளிவரத் தொடங்கின. இந்நிலையில் 'நூல், புத்தகம்' குறித்த உரையாடல் அயோத்திதாசர், உ.வே. சாமிநாதையர், மயிலை சீனி. வெங்கடசாமி உள்ளிட்டோரின் கருத்துகளின்வழி வேறொரு தளத்திற்கு நகர்ந்தது. அதனை அடுத்த மாதம் வெளிவரும் மூன்றாம் பகுதியில் விரிவாகக் காண்போம்.

யூனிகோடு எனும் ஒருங்குறி

ரஞ்சித் ரூஸோ, தமிழ் எழுத்துருக் கூடம்

முதன்மைச் சொற்கள்: குறியாக்க அமைப்பு, Encoding System, யூனிகோடு, கணினி

பகுதி - 2

	0B8	0B9	0BA	0BB	0BC	0BD	0BE	0BF
0		ஐ 0B90		ர 0BB0	◌ீ 0BC0	ௐ 0BD0		௰ 0BF0
1				ற 0BB1	◌ு 0BC1			௱ 0BF1
2	◌ஂ 0B82	ஒ 0B92		ல 0BB2	◌ூ 0BC2			௲ 0BF2
3	ஃ 0B83	ஓ 0B93	ண 0BA3	ள 0BB3				௳ 0BF3
4		ஔ 0B94	த 0BA4	ழ 0BB4				௴ 0BF4
5	அ 0B85	க 0B95		வ 0BB5				௵ 0BF5
6	ஆ 0B86			ஶ 0BB6	ெ◌ 0BC6		௦ 0BE6	௶ 0BF6
7	இ 0B87			ஷ 0BB7	ே◌ 0BC7	◌ௗ 0BD7	௧ 0BE7	௷ 0BF7
8	ஈ 0B88		ந 0BA8	ஸ 0BB8	ை◌ 0BC8		௨ 0BE8	௸ 0BF8
9	உ 0B89	ங 0B99	ன 0BA9	ஹ 0BB9			௩ 0BE9	௹ 0BF9
A	ஊ 0B8A	ச 0B9A	ப 0BAA		ொ 0BCA		௪ 0BEA	௺ 0BFA
B					ோ 0BCB		௫ 0BEB	
C		ஜ 0B9C			ௌ 0BCC		௬ 0BEC	
D					◌் 0BCD		௭ 0BED	
E	எ 0B8E	ஞ 0B9E	ம 0BAE	◌ா 0BBE			௮ 0BEE	
F	ஏ 0B8F	ட 0B9F	ய 0BAF	◌ி 0BBF			௯ 0BEF	

குறியீட்டுப் புள்ளி

கடந்த மாதம் வெளியான பகுதி-1 கட்டுரையில் தரப்படுத்தப்பட்ட குறியாக்க முறை ஏன் அவசியமாகிறது என்பதையும், தற்போது இருக்கும் குறியாக்க முறைகளில் அனைவராலும் ஏற்றுக்கொள்ளப்படும் தரநிலையாக யூனிகோடு செயல்படுவதையும் பற்றிப் பேசியிருந்தோம். இந்தப்பகுதியில் தமிழ்ச் சூழலில் யூனிகோடு எப்படி இயங்குகிறது என்பதைப் பார்ப்போம்.

அனைத்து மொழிகளின் எழுத்துகளையும் ஒரே குறியாக்க முறையில் சிக்கலின்றி காண்பிக்கவேண்டும் என்பதே யூனிகோடு செயல்படுவதன் முதன்மை நோக்கம். இதற்காக ஒவ்வொரு எழுத்துக்கும் (character) அல்லது உருவுக்கும் (glyph) ஒரு தனித்துவமான எண்-எழுத்துக் கலவையில் ஒரு குறியீட்டுச் சொல் கொடுக்கப்படுகிறது. இதற்கு Code Point என்று பெயர். இதைக் குறியீட்டுப் புள்ளி என்று தமிழில் குறிப்பிடலாம். எடுத்துக்காட்டாக தமிழ் எழுத்து ‘அ’ என்பதற்கு U+0B85 என்பது குறியீட்டுப் புள்ளி. லத்தீன் எழுத்து ‘A’ என்பதற்கு U+0041 என்பது குறியீட்டுப் புள்ளி.

யூனிகோடு என்பதை ஒரு பெரிய கட்டடமாக நினைத்துக்கொள்வோம். இந்தக் கட்டடத்தில் U+0B85 என்பது ‘அ’ என்ற எழுத்துக்கு ஒதுக்கப்பட்ட அறை. இப்படி U+0000 முதல் U+10FFFF வரை கிட்டத்தட்ட 11 லட்சம் அறைகள் இக்கட்டடத்தில் உள்ளன. இந்தக் கட்டடத்தை 17 தளங்கள் (Planes) கொண்டதாக பிரித்துக் கொள்ளலாம். ஒரு தளத்தில் 65,536 அறைகள் உண்டு. இதில் Plane 0 என்பது Basic Multilingual Plane என்றழைக்கப்படுகிறது. இதைத் தரைத்தளம் என்று வைத்துக்கொள்ளலாம்.

லத்தீன், சிரிலிக், சீன மொழி, ஜப்பானிய மொழி, அரபி, தமிழ் உட்பட தற்காலப் பயன்பாட்டில் இருக்கும் அனைத்து மொழிகளின் எழுத்துகளும், அதாவது நாம் பயன்படுத்தும் 90% எழுத்துகள் இங்குதான் குடியிருக்கின்றன. Plane 1 (முதல் தளம் என்று வைத்துக்கொள்வோம்) என்பது Supplementary Multilingual Plane. தற்கால பயன்பாட்டில் இல்லாமல் அழிந்துபோன வரலாற்று எழுத்துகள்

Alphabet	ka	ki	ku	ke	ko
Syllabary	か	き	く	け	こ
Abugida	கா	கி	கு	கெ	கொ

(எகிப்தின் ஹைரோகிளிப் போன்றவை), குறியீடுகள், ஈமோஜி, சில அரிய எழுத்துமுறைகள் போன்றவை இதில் உள்ளன. இப்படி கிட்டத்தட்ட ஒவ்வொரு தளத்திற்கும் ஒரு பயன்பாடு உண்டு.

யூனிகோடு, தமிழ் எழுத்திற்கென Base Multilingual Plane என்ற தளத்தில் U+0B80 முதல் U+0BFF வரை மொத்தம் 128 குறியீட்டுப் புள்ளிகளை ஒதுக்கியிருக்கிறது. தமிழ் மொழியின் பல்வேறு எழுத்துகள், எண்கள், சின்னங்களைக் குறிப்பிட மொத்தம் 128 குறியீட்டுப் புள்ளிகள் உள்ளன. இதில் நாம் தற்போதுவரை 72 குறியீட்டுப் புள்ளிகளையே பயன்படுத்துகிறோம். மீதமுள்ள 56 புள்ளிகள் எதிர்கால விரிவாக்கத்திற்காகவும், எழுத்துச் சீர்மைப்படுத்துவதற்காவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

1988ஆம் ஆண்டு இயற்றப்பட்ட Indian Script Code for Information Interchange (ISCII) என்ற தரநிலையின் அடிப்படையில் இந்திய மொழிகளின் எழுத்துகள் யூனிகோடில் குறியாக்கம் செய்யப்பட்டது. ISCII என்பது ASCII என்ற அமெரிக்க லத்தீன் எழுத்துகளுக்கான குறியாக்க அமைப்பிலிருந்து உருவாக்கப்பட்டது. இது அபுகிதா (Abugida) என்ற அமைப்பு முறையால் கட்டமைக்கப்பட்டது. ஆரம்பத்தில் இந்த முறையை சிலர் தமிழுக்கு ஏற்றுக்கொள்ள மறுத்தாலும் தற்போது இந்த முறையிலேயே நாம் எழுத்துகளைப் பயன்படுத்துகிறோம்.

1991இல் யூனிகோடில் தமிழ் கொண்டுவரப்பட்டது. அப்போது மொத்தம் 61 கட்டங்கள் மட்டுமே தமிழுக்கு இருந்தன. 2003 ஆம் ஆண்டில் தமிழுக்கெனத் தனித்துவமாக இருக்கும் 8 எழுத்துகள் யூனிகோடில் கொண்டுவரப்பட்டன. அவை ௳ - நாள், ௴ - மாதம், ௵ - ஆண்டு, ௶ - செலவு, ௷ - வரவு, ௸ - மேற்படி/Ditto , ௹ - ரூபாய், ௺ - எண்.

2005ஆம் ஆண்டில் கிரந்த எழுத்தான ஷ மற்றும் எண் பூஜியம் ஆகியவை கொண்டுவரப்பட்டன. 2008ஆம் ஆண்டு ஓம் என்ற குறி எழுத்தாக யூனிகோடில் வந்தது. தமிழுக்கு மிக முதன்மையான மேம்பாடாகக் கருதப்படுவது 2010ஆம் ஆண்டு வெளியான யூனிகோடு 6.0. இதில் முதன்முதலாக தமிழ் பிராமி / தமிழி எழுத்துகளுக்கென U+11000 முதல் U+1107F வரை தனி குறியீட்டுப் புள்ளிகள் கொடுக்கப்பட்டன. இதனால் தற்கால தமிழ் வடிவமும், பிராமி எழுத்து வடிவமும் ஒருசேர இயங்கமுடிகிறது.

தற்போதுள்ள தமிழ் யூனிகோடு கட்டமைப்பு பின்வருமாறு:

- உயிர் எழுத்துகள்: அ (U+0B85) முதல் ஔ (U+0B94) வரை
- மெய் எழுத்துகள்: க (U+0B95) முதல் ஹ (U+0BB9)
- சார்பு எழுத்துகள்: துணைக்கால் (U+0BBE), இகர கொக்கி (U+0BBF), ஈகாரக் கொக்கி (U+0BC0) ஆகியவை

- உயிர்மெய் எழுத்துகளின் அடிப்படை புள்ளி (U+0BCD) என்பதால் இது சார்பு எழுத்துகளில் அடங்காத தனி எழுத்து.
- எண்கள்: ௦ (U+0BE6) முதல் ௯ (U+0BEF) வரை
- சிறப்பு எழுத்துகள்: ஆய்த எழுத்து - ஃ (U+0B83)
- மத சின்னம்: ௐ (U+0BD0)
- எண் கூட்டுத் தொகைகள்: ௰ (U+0BF0) பத்து, ௱ (U+0BF1) நூறு, ௲ (U+0BF2) ஆயிரம்
- காலண்டர் குறியீடுகள்: நாள் - ௳ (U+0BF3), மாதம் - ௴ (U+0BF4), ஆண்டு - ௵ (U+0BF5)
- ரூபாய் - ௹ (U+0BF9)
- எண்களைக் குறிக்கும் சின்னம்: ௺ (U+0BFA)

டிஜிட்டல் வழியில் மொழியின் நிலைத்த தன்மையை உறுதிப்படுத்தவும், எளிமையான தகவல்தொடர்புக்கும் தமிழ் யூனிகோட் தொகுதி ஒரு முக்கியமான முயற்சியாகும். தமிழ் பிராமி / தமிழி எழுத்துகளைக் கொண்டுவந்ததன் மூலம் நாம் தமிழின் பழமையை டிஜிட்டல் உலகத்திற்கு கடத்தியிருக்கிறோம் அதே நேரத்தில் தமிழின் சமகால பயன்பாட்டையும் எளிதாக்கியிருக்கிறோம்.

யூனிகோடில் தமிழில் தற்போது இருக்கும் இந்த அபுகிதா முறைக்கு பதிலாக யூனிகோடை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட TACE16 என்ற புதிய முறையைத் தமிழுக்கான முதன்மையான யூனிகோடு முறையாக மாற்றவேண்டும் என்று தமிழ்நாடு அரசு கேட்டுள்ளது. இது ஏன் என்பதைப்பற்றி விரிவாக அடுத்தப் பகுதியில் பார்க்கலாம்.

Upcoming events at RMRL

07 - 05 - 2025, 5.30 pm : ரோஜா விதிகள்
உரைவெளி கலந்துரையாடலுக்கான களம்
முனைவர் தே. சங்கர சரவணன்

09 - 05 - 2025, 5.30 pm : தமிழியல் ஆய்வுகளும் தொடரடைவும்
மு. ஆனந்தகிருஷ்ணன் அறக்கட்டளைச் சொற்பொழிவு
பேரா. ப பாண்டியராஜா

16, 17 - 05 - 2025, 10 am - 5 pm : TFS workshop & Seminar 2025
Tamil Font Studio Workshop and Seminar 2025 in association with Onemai Foundation.
RMRL, in association with Onemai Foundation, is organising a full-day Workshop followed by a full-day seminar. This workshop is facilitated by veteran type designer Mr. Muthu Nedumaran. Moreover, experienced designers and cultural researchers will present their lectures at the seminar.